Registered as a Newspaper

விக்ஞு டியூசன் சென்ரர்
52, ஸ்ரான்லி ரோட்,
யாழ்நகர்
கலை,
வர்த்தகம் A L 89
பகல் 12-00 மணிக்கு
ஆரம்பமாகவுள்ளது
புதிய பிரிவு ஆரம்பமாகவுள்ளது.
பொருளியல்: திரு கிருஷ்ணானந்தன்
வர்த்தகம் : திரு. லங்காதுரை
கணக்கியல் : திரு. வன்னியசிங்கம்
மு குறிப்பு: முன்கூட்டியே பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவேண்டும்.

உதயன்

உண்மை – அஞ்சாமை – நடுநிலைமை

விலை:
ரூ 1-25

விக்ஞு டியூசன் சென்ரர்
52, ஸ்ரான்லி ரோட்,
யாழ்நகர்
அளவையியல்: திரு சுப்பிரமணியம்
தமிழ் : திரு. குழந்தை
இந்து நாகரிகம்: திரு. காரை சுந்தரம்பிள்ளை
புவியியல்: திரு. குணராசா
அரசியல்: திரு மகேந்ராஜ்
கிறிஸ்தியானிற்றி: திரு. யேசுதாஸ்
மு. குறிப்பு: யாழ் நகரில் கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்.

சுடர்: 2 யாழ்ப்பாணம் அக்ஷய ௵ மாசி மீ 10 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1407 ஜமா ஆகிர் பிறை 23 (22-02-1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 74

பரந்தனில் பிரதான இராணுவ முகாம்

கிளிநொச்சி நகரில் தனிக்கொமாண்டோ முகாம்

யாழ்ப்பாணம். பெப். 22

பரந்தனில் அமைக்கப்பட்ட இராணுவ முகாம் பிரதான முகாம்களில் ஒன்றாகப் பலப்படுத்தப்படும் என்று நம்பிக்கையாகத் தெரியவருகிறது. அதன் பொருட்டு பல விஸ்தரிப்பு வேலைகளுக்கான ஏற்பாடுகளை இராணுவத்தினர் செய்துவருவதாக அறிய வந்துள்ளது.

இதேவேளை கிளிநொச்சி நகரில் இப்போது உள்ள இராணுவ - பொலீஸ் கூட்டுமுகாம் கொமாண்டோக்களுக்கான (அதிரடிப் படைப் பொலீஸாருக்கான) தனிமுகாமாக மாற்றி அமைக்கப்படும் என்றும் தெரியவந்துள்ளது.

பரந்தனில் கடந்த வாரம் அமைக்கப்பட்ட இராணுவ முகாமை விஸ்தரிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

பரந்தன் பகுதியில் உள்ள பல தனியார் கட்டடங்களைச் சுவீகரிக்கும் வேலைகள் இப்போது நடந்து வருகின்றன. கிளிநொச்சியில் உள்ள இராணுவத்தினர் அங்கு மாற்றப்படுவர் என்றும் மேலதிகமாகச் சிப்பாய்கள் தருவிக்கப்படுவர் என்றும் அறியவந்தது.

இதேவேளை கிளிநொச்சிக்கு மேலதிகமாகக் கொமாண்டோ படையினர் தருவிக்கப்படுவர் என்றும் அறியப்படுகிறது.

நேற்றுமுதல் பரந்தனிலும் பயணிகளின் வாகனங்களையும் பயணிகளையும் சிப்பாய்கள் சோதனையிடத் தொடங்கியுள்ளனர், (அ-10)

திறக்கப்படாத கடைகள் குண்டுவைத்து தகர்க்கப்படுமாம்!

யாழ்ப்பாணம், பெப். 22

கிளிநொச்சியில் உள்ள வர்த்தக நிலையங்கள் திறக்கப்படாவிட்டால் அவை குண்டு வைத்துத் தகர்க்கப்படும்.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட இராணுவ உயரதிகாரிகளில் ஒருவர் கிளிநொச்சி மாவட்ட வர்த்தகர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளாராம்.

இந்த எச்சரிக்கையை அடுத்து சில வர்த்தகர்கள் தமது வர்த்தக நிறுவனங்களுக்குச் சென்று அவற்றைக் கழுவி திறப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

இதே வேளை கிளிநொச்சி சந்தையும் பழைய இடத்தில் கூட வேண்டும் எனவும் அந்த அதிகாரி வலியுறுத்தியுள்ளாராம்.

எனினும் கிளிநொச்சி நிலைமை இன்னும் வழமைக்கு திரும்பவில்லை.

நகரில் மக்கள் நடமாட்டம் வெகு குறைவாகவே காணப்படுகிறதாம்

வாகனங்கள் மட்டும் பிரதான வீதி வழியாக போக்குவரத்து மேற்கொள்கின்றன. (இ-10)

கூட்டணி மீண்டும் அவசரத் தந்தி

சென்னை, பெப். 21

இலங்கைத் தமிழரைப் படுகொலையில் இருந்து காப்பாற்றுங்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணி நேற்று இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு மீண்டும் அனுப்பிய அவசரத் தந்தியில் முன்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

(இ-ஈ)

அ.செ.மு.வின் 'மனிதமாடு' வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், பெப்.22

மறுமலர்ச்சி எழுத்தாளர் திரு. அ. செ. முருகானந்தனின் 'மனித மாடு' சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா இன்று ஞாயிறு காலை நல்லூர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

யாழ் மாவட்டக் கலாசாரப்பேரவையின் இலக்கியக்குழு இவ் வெளியீட்டு விழாவை நடத்துகின்றது.

யாழ் அரச அதிபரும் கலாசார பேரவைத் தலைவருமான திரு. வை. மு. பஞ்சலிங்கம் தலைமையில் வெளியீட்டு விழா இன்று காலை 9-30 மணிக்கு ஆரம்பமாகும்.

(3ஆம் பக்கமும் பார்க்க)

(இ-எ)

கால்நடைகளை தேடும் சிப்பாய்கள்

யாழ்ப்பாணம் பெப். 22

முல்லைத்தீவு பகுதியில் ரோந்து செல்லும் சிப்பாய்கள் கால்நடைகளை வேட்டையாடி வருகின்றனராம்.

இதனால் இப் பகுதி மக்கள் தமது கால்நடைகளை கட்டி வளர்க்க ஆரம்பித்துள்ளனர். (இ-10)

ரூ. 16 செலவில் பாண் உண்ணும் சிப்பாய்கள்

யாழ்ப்பாணம் பெப் 22

வடபகுதியில் உள்ள இராணுவ முகாம்களில் உள்ள சிப்பாய்களுக்கு காலை உணவாக பாண் வழங்கப்படுகிறது. ஒரு இருத்தல் பாணுக்கு 16 ரூபா செலவு ஏற்படுதாம்.

சிப்பாய்களுக்கு வழங்கப்படும் பாண் தினமும் வவுனியாவில் இருந்தே விமானம் மூலம் பலாலிக்குக் கொண்டுவரப்பட்டு பின்னர் பலாலியில் இருந்து ஹெலிக்கொப்டர் மூலம் முகாம்களுக்கு வழங்கப் படுகின்றது.

இதற்கான செலவைக் கணக்குப் பார்க்கும் போதே ஒரு இருத்தல் பாணுக்கு 16 ரூபா செலவாகிறதாம்.

(இ-10)

அகதிகள் அந்தஸ்து கோர

இலங்கை உட்பட 18 நாடுகளுக்கு கனடா கட்டுப்பாடு

ஒட்டாவா, பெப் 21

அகதிகள் அந்தஸ்து கோரி நுழைவதைக் கட்டுப்படுத்தும் சட்டவிதிகளை கனேடிய அரசு அமுலுக்கு கொண்டுவந்துள்ளது.

அகதிகளாகித் தவிப்போருக்குப் புகலிடம் அளிக்கும் பாரம்பரிய முறையை துஷ்பிரயோகம் செய்பவர்களே புதிய சட்டத்தினால் பாதிக்கப்படுவர் என்று கனடா குடிவரவு அமைச்சர் திரு. பெயிரேட் பௌசாட் அறிவித்திருக்கிறார்.

உண்மையில் அகதிகளாகித் தவிப்போருக்கு புகலிடம் அளிக்கக் கனடா என்றுமே தயங்காது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

கனடாவின் புதிய கட்டுப்பாடுகளுக்கு அமைய ஈரான், கௌதமாலா, இலங்கை உட்பட 18 நாடுகளில் இருந்து கனடாவுக்குச் செல்பவர்கள் உண்மையான அகதிகள் என்று காணப்படாவிட்டால் திருப்பி அனுப்பப்படுவர். (இ-எ-ஓ)

முச்சந்தி முனி



ஒரு இருத்தல் பாண் 16 ரூபா முடியுதெண்டால், பாதுகாப்புச் செலவு பட்ஜட்டில் 25 சத வீதம் எண்டதை எப்பிடி நம்பலாம்?

அடகு வைத்தோர் சங்கம்

நாளை முதல் செயலகம் மற்றும் அலுவலகங்கள் முன்னாலும் மறியல்

யாழ்ப்பாணம். பெப் 22

அடகுவைத்தோர் சங்கத்தின் மறியல் போராட்டம் நாளைமுதல் செயலகம் மற்றும் அரச அலுவலகங்களுக்கு விஸ்தரிக்கப்படவுள்ளது:

அலுவலகங்களுக்கு முன்பாகவும் மறியல் போராட்டம் நடத்தப்பட்டு வெற்றி அளிக்காவிட்டால் மார்ச் மாதம் 2 ஆம் திகதியில் இருந்து ஏனைய வங்கிகள் முன்பாகவும் மறியல் போராட்டம் விஸ்தரி

(4 ஆம் பக்கம் பார்க்க)

யாழ். நகரில் பல கட்டடங்களை செயலிழக்கச் செய்யத் திட்டம்

யாழ்ப்பாணம், பெப் 22

யாழ்ப்பாண நகரத்தில் உள்ள பல பெரிய கட்டடங்கள் இன்னும் இரண்டொரு தினங்களில் செயலிழக்கச் செய்யப்படும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் யாழ் மாவட்டத் தளபதி கிட்டு மேற்கண்டவாறு சொன்னார்.

நகரத்தில் உள்ள உயர்ந்த கட்டடம் ஒன்றில் இராணுவம் முகாமிட இருப்பதாக நகரில் நேற்றுப் பெரும் வதந்தி பரவியது.

இதுகுறித்து உதயன் செய்தியாளர் திரு. கிட்டுவிடம் பிரஸ்தாபித்த போதே அவர் முன்கண்டவாறு சொன்னார்.

"குறிப்பிட்ட கட்டடத்தில் இராணுவம் குடிகொள்ள முயற்சிப்பது குறித்துக் கொழும்பில் இன்னும் தீர்க்கமாக முடிவு செய்யப்படவில்லை. சர்ச்சைக்குரிய விடயமாகவே இருக்கிறது. எனினும் நாம் கவனயீனமாக இருந்து விடமுடியாது" என்றும் அவர் தெரிவித்தார்.

கட்டடங்களைச் செயல் இழக்கச் செய்வது குறித்து திரு. கிட்டு மேலும் கூறியதாவது:-

தொலைத் தொடர்புத் திணைக்களத்திற்குள் சிப்பாய்கள் முகாம் இட்டதையடுத்து வீரசிங்கம் மண்டபத்திலும் தபாற் கந்தோரிலும் முகாமிட எத்தனித்தனர்.

இதன் காரணமாக நாம் மேற்படி இரண்டு கட்டடங்களையும் செய

(4ஆம் பக்கம் பார்க்க)

மரண தண்டனைச் செய்தியுடன் தொடர்பில்லை

அமிர் யாழ். வருவது எமக்கு பிரச்சினையல்ல; கவலையுமில்லை

கிட்டு சொல்கிறார்

அலுவலகச் செய்தியாளர்: கே. இரத்தினராஜசிங்கம்

யாழ்ப்பாணம், பெப். 22

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் எமக்கும் எந்த வித உறவும் இல்லை.

கூட்டணியினரை மக்கள் ஏற்கனவே தூக்கி எறிந்து விட்டனர்.

அமிர்

தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்டத் தளபதி திரு கிட்டு முன்கண்டவாறு உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கத்துக்கு மரண தண்டனை விதித்து இருப்பதாக வெளிவந்த செய்திகள் பற்றி திரு. கிட்டுவிடம் கேட்டபோது அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்,

"அந்தச் செய்திக்கும் எமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை" என்றும் அவர் கூறினார்.

திரு. கிட்டு இது தொடர்பாகச் சொன்னதாவது:-

ஆயிரக்கணக்கான இளைஞர்களை ஆயுதம் ஏந்த வைத்தவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியினர்.

இளைஞர்களைத் தூண்டி விட்டவர்கள் கூட்டணியினர். போராட்டத்திலே ஏராளமான இளைஞர்கள் பலியாகிவிட்டனர். இதனை தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மறந்து விடமுடியாது அவர்களை மக்கள்

கிட்டு

இன்று தூக்கி எறிந்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்

22- 02 1987
ஞாயிற்றுக்கிழமை
சுபநேரம்:
9-31 முதல் 11-01 வரை
ராகுகாலம் :
5-01 முதல் 6-31 வரை
இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்
நவமி முன்னிரவு
8 22 வரை

மின்சாரம் தாக்கியது

யாழ்ப்பாணம், பெப். 22

யாழ் நகரிலுள்ள ஆரிய குளத்தடியிலுள்ள மின் மாற்றி ஒன்றின் அருகில் குருவி பிடிக்க முயன்ற ஒருவர் மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளானார்.

மின்சாரத் தாக்குதலுக்குள்ளான அவர் தற்போது யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

டிசம்பர் 19 யோசனைப்படி

தமிழர் கட்டுப்பாட்டில் கிழக்கு முழுவதும் வரும்

அத்தனகலை எம், பி. அபாய எச்சரிக்கை

கொழும்பு, பெப். 22

டிசம்பர் 19 யோசனைப்படி கிழக்கு மாகாணத்தில் உள்ள சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் செல்லாக் காசாகிவிடும். தமிழர்களே கிழக்கு மாகாணம் முழுவதையும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பர்.

அத்தனகலை எம்.பி. திரு லக்ஷ்மன் ஜயக்கொடி, நாடாளுமன்றத்தில் பேசுகையில் முன்கண்டவாறு சொன்னார்.

அவசரகாலச் சட்டம் நீடிப்புப் பிரேரணை விவாதத்தில் கலந்து கொண்டு திரு. ஜயக்கொடி மேலும் சொன்னதாவது:

டிசம்பர் 19 யோசனை கிழக்கு மாகாணத்தை

(4-ம் பக்கம் பார்க்க)

2 சிறுமிகள் குளத்தில் மூழ்கி மரணம்

வேலணை, பெப். 22

குளத்தில் குளிக்கச் சென்ற இரு சிறுமிகள் நீரில் மூழ்கி மரணமானார்கள்

வேலணை கிழக்கில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை இச்சம்பவம் நடந்தது.

வேலணை கிழக்கு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த சிவகுமாரன் தமிழினி(வயது 8)குமாரசாமி ராதா (வயது 8)

(4 ஆம் பக்கம் பார்க்க)

துவாரகையை கண்டுபிடிக்கும் ஆழ்கடல் ஆராய்ச்சி

2 ஆண்டுகளில் பூர்த்தியாகும்

பெங்களூர், பெப். 21

கிருஷ்ணபகவான் காலத்திய துவாரகையைக் கண்டுபிடிக்கும் ஆழ்கடல் ஆராய்ச்சிப் பணி இன்னும் இரண்டு ஆண்டுகளில் பூர்த்தி அடையும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

குஜராத் மாநிலத்தில் இந்த ஆராய்ச்சிப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பிரபல கடல் புதைபொருள் ஆராய்ச்சியாளர் டாக்டர் எஸ் ஆர். ராவ் இப்பணிக்குப் பொறுப்பாக உள்ளார்.

டாக்டர் ராவ் இதுசம்பந்தமாக சொன்னதாவது!

இத்திட்டத்தைச் செயற்படுத்துவதில் இத

(4ஆம் பக்கம் பார்க்க)

? ? ? <——> ? ? ?

ஒரு போட்டி?

* * *

யாருக்கு ?
எதற்காக ? ?

* * *

விளையாட்டு
ரசிகர்களே!
விவரங்களை
நாளைய
உதயனில்
எதிர்பாருங்கள் !!

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

அராலித் துறையில் தாம்போதி அமைக்கும் முயற்சி துரிதம்

நிதி சேகரிப்பு வேலை ஆரம்பம்

வேலணை, பெப் 22

அராலித் துறையில் தாம்போதி அமைப்பதற்காக நிதி சேகரிக்கப்பட்டு வருகிறது

தீவுப்பகுதியிலுள்ள அபிவிருத்திச்சபை உப அலுவலகப் பிரிவுகள் ஒவ்வொன்றும் தாம்போதி அமைப்புக் குழுக்களாக இயங்கி வருகின்றன.

இக்குழுக்களே சம்பந்தப்பட்ட பகுதிகளில் நிதி சேகரித்து வருகின்றன.

வேலணை அராலித்துறைக்கும் அராலித்துறை முகத்துக்கும் இடையே தற்போது படகுப் போக்குவரத்து நடைபெற்று வருகிறது. சுமார் இரண்டு மைல் தூரம் இக்கடலில் மக்கள் படகுப் பயணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இதனால் பெரும் சிரமங்களும் கால தாமதங்களும் ஏற்படுகின்றன இந்த அவல நிலையைப் போக்கும் பொருட்டே இத்துறை முகங்கள் இரண்டையும் இணைக்கும் வகையில் தாம்போதி அமைப்பதற்குத் தற்போது முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

தாம்போதி அமைக்க சுமார் 75 லட்சம் ரூபா செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது

(இ-67-131)

தாம் நசுக்கப்படுவதாக மக்கள் உணரும்போது

போராட்டம் ஆரம்பமாகிறது

ஊர்காவற்றுறை, பெப் 22

அடக்கு முறைகளுக்கு எதிராகப் போராடும் தன்மை உலகெங்கும் தற்போது காணப்படுகின்றது தாங்கள் நசுக்கப்படுவதையும் உரிமைகள் மறுக்கப்படுவதையும் மக்கள் எப்போது உணர்கின்றார்களோ அன்று தொடக்கம் போராடுகின்றார்கள். அதேபோல் எமது மண்ணிலும் போராட்டம் நடந்து கொண்டிருக்கின்றது.

கைதடியில் வெடிகுண்டு விபத்தில் வீர மரணமெய்திய புலிகளின் அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய சுருவில் சனசமூக நிலையச் செயலாளரும் 'மாற்று' சஞ்சிகையின் ஆசிரியருமான திரு. ஆர். என். லோகேந்திரலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

புளியங்கூடல் சந்தை மைதானத்தில் இந்த அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு. வி. கந்தப்பு கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

திரு. லோகேந்திரலிங்கம் தொடர்ந்து உரையாற்றுகையில் போராட்டக் காலத்தில் விமர்சனங்கள் அவசியமானவை போராளிகள் தங்களை சரியான முறையில் சுய விமர்சனம் செய்து கொள்ளவேண்டும்.

அதேபோல் மக்களும் வெறுமனே வாய்வீச்சுக்காரர்களாக இல்லாமல் அரசியல் நோக்கோடு போராளிகளை விமர்சனம் செய்யவேண்டும்.

இதுவே நாம் மறைந்த போராளிகளுக்கு செலுத்துகின்ற உயர்ந்த அஞ்சலியாகும்.

இவ்வாறு அவர் கூறினார். (இ-16)

கல்வி வளர்ச்சிக் கழகம்

நெடுங்கேணி, பெப் 22

நெடுங்கேணி இளைஞர்களால் கல்வி வளர்ச்சிக் கழகம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு நடமாடும் நூலகம் ஒன்றும் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

(இ-108)

முதலாவது ஆண்டு விழா

யாழ்ப்பாணம், பெப் 22

ஊரெழு சைவாலய முன்னேற்றக் கழகம் மகாசிவராத்திரி வைபவத்துடன் கழகத்தின் முதலாவது ஆண்டு விழாவையும் இம்மாதம் 26ஆம் திகதி நடத்தத் தீர்மானித்து உள்ளது.

மகாசிவராத்திரி விழா ஊரெழு கிழாலைப்பதி ஸ்ரீ மனோன்மணி அம்மன் ஆலயத்தில் நடைபெறும்.

நான்கு ஜாமப் பூசையின் மத்தியில் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

அத்துடன் கிராமத் தொண்டர்கள், வள்ளல்கள், ஆகியோருக்கும் பாராட்டு வைபவமும் இடம்பெறும். (இ-ஏ)

தபால் நிலையம் இடம் மாறுகிறது

வல்வெட்டித்துறை, பெப் 22

வல்வை இராணுவ முகாமுக்கு அண்மையில் உள்ள தபால் நிலையம் மாத இறுதியில் வல்வை நவீன சந்தைக்கு சமீபமாக உள்ள இலங்கை மக்கள் வங்கிக் கிளை இயங்கி வந்த கட்டடத்துக்கு மாற்றப்பட உள்ளது.

இராணுவ கெடுபிடி காரணமாக இயங்கமுடியாத நிலை பொது மக்களின் போக்குவரத்துக் கஷ்டம் ஆகியவையே தபால் நிலையம் இடம் மாறக் காரணம் ஆகும்.

(இ-160)

கிராம மக்கள் தத்தமது கிராம வளர்ச்சியில் கவனம் செலுத்த வேண்டும்

கரவெட்டி, பெப் 22

சகல கிராம மக்களும் தத்தமது கிராமங்களின் வளர்ச்சியில் முழுக் கவனம் செலுத்த வேண்டும்.

இமையாணன் தமிழ்க் கலவன் பாடசாலை வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய நெல்லியடி கோட்டக் கல்வி அலுவலக நிர்வாக கல்வி அதிகாரி திரு வி கே. ஈசரபாதம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பிரஸ்தாப பாடசாலை அதிபர் திரு. குட்டித்தம்பி தலைமையில் நடைபெற்ற இந்த விளையாட்டுப் போட்டியில் திரு ஈசரபாதம் மேலும் உரையாற்றுகையில் கிராமமக்களின் ஒத்துழைப்பை இன்றைய விளையாட்டுப் போட்டியில் காணக்கூடியதாக இருந்தது என்றார்,

வெற்றி பெற்றவர்களுக்கான விருதுகளை திருமதி ரஞ்சிதமலர் ஈசரபாதம் வழங்கினார்.

(இ-70)

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

திருநெல்வேலியில் இராமகிருஷ்ண ஜெயந்தி விழா

யாழ்ப்பாணம், பெப். 22

ஸ்ரீ இராமகிருஷ்ண ஜெயந்தி தினவிழா திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்தில் அடுத்த மாதம் முதலாம் திகதி நடைபெறும்.

காலையில் பஜனை, பூஜை இடம்பெறும் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸ அவதார மகிமை என்னும் பொருள்பற்றி திரு. அ. சி. குலரத்தினம் பேசுவார்.

'இராமகிருஷ்ணர்சர்வ சமயவாதி' என்னும் பொருள்பற்றி விரிவுரையாளர்கள் திருமதி மல்லிகா ராஜரத்தினம் திருமதி கலைவாணி ராமநாதன் ஆகியோர் பேசுவர்-

பண்ணிசைப் புலவர் வே சிவஞானம் அவர்களின் பண்ணிசைக் கச்சேரி, நல்லை ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகளின் ஆசியுரை ஆகியனவும் இடம்பெறும்

மாலை நிகழ்ச்சியில் பேராசிரியர் ப. சந்திரசேகரம் 'பரமஹம்ஸர் சமகாலம் கண்ட தீர்க்கதரிசி' என்னும் பொருள் பற்றிப் பேசுவார்

சங்கீத வித்துவான் திருமதி நாகேஸ்வரி பிரம்மானந்தாவின் இன்னிசைக் கச்சேரியும் இடம் பெறும். செல்வி சத்தியகலா திருநாவுக்கரசு உடன் பாடுவார். (உ-எ)

எரிபொருள் தடையை நீக்குமாறு கிறிஸ்தவ சபை கோரிக்கை

கொழும்பு, பெப். 22

யாழ் குடாநாட்டு மக்களைக் கஷ்டத்துக்கு உள்ளாக்கியுள்ள எரிபொருள் தடையை நீக்கும்படி அரசாங்கத்தை தேசிய கிறிஸ்தவ சபை கேட்டுள்ளது

கடந்த புதன்கிழமை விடுத்த அறிக்கை ஒன்றில் தேசிய கிறிஸ்தவ சபை இந்தக் கோரிக்கையை விடுத்தது.

சபைத்தலைவர் வண டாக்டர் டபிள்யு ஜி. விக்கிரமசிங்கா, பொதுச் செயலாளர் ஷேர்னி ஜே எஸ் பீரிஸ் ஆகியோர் இந்த அறிக்கையில் கையொப்பமிட்டு இருக்கின்றனர்.

அறிக்கை வருமாறு:

ஐக்கிய இலங்கையில் சகல பிரஜைகளும் இன பாரபட்சமின்றி சுயமரியாதை, கௌரவத்துடன் வாழவேண்டும் என்ற கொள்கையை சபை எப்பொழுதும் வற்புறுத்தி வருகிறது

சகல பிரஜைகளுக்கும் சமமான தொழில், கல்வி வாய்ப்புக்கள் கிடைப்பதை உறுதி செய்யுமுகமாக சிங்களம் தமிழ் ஆகிய இரண்டு மொழிகளையும் உத்தியோக மொழிகளாக்கும்படி சபை தொடர்ந்தும் வலியுறுத்தி வருகிறது

அடக்கு முறைச் சட்டங்கள் எல்லாவற்றையும் ரத்துச்செய்யும்படி அரசாங்கத்தை இச்சபை கோருகிறது.

மனித உரிமைகளின் அடிப்படையின் பேரால் மட்டும் அல்லாமல் மனிதஇனத்தின் பேரால் இவ்வேண்டுகோளை விடுத்துள்ளது.

எல்லாத் தரப்பினரின் வன்முறைகளையும் சபை கண்டிக்கிறது.

இராணுவநடவடிக்கையை விடுத்து அமைதிப் பேச்சுக்களை நடத்தி அரசியல் தீர்வு காணும்படி அரசாங்கத்தையும் போராளிகளையும் சபை வேண்டுகிறது.

இப்படி தேசிய கிறிஸ்தவ திருச்சபையின் அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது. (உ-எ)

வழமை போல் உடற் கல்வி போட்டிகள்

புங்குடுதீவு, பெப் 22

யாழ் மாவட்டப் பாடசாலைகளின் வருடாந்த உடற்கல்வி விளையாட்டுப் போட்டிகள் வழமை போல இவ்வாண்டும் நடைபெறவுள்ளன.

இப் போட்டிகள் யாவும் பாடசாலை, வட்டார, மாவட்ட நிலையில் நடைபெறும்.

பாடசாலை வட்டார நிலையிலான போட்டிகள் யாவும் எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் நடைபெறவேண்டுமென யாழ் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மெய்வல்லுனர், கரபந்து, வலைபந்து, பாட்மின்டன், தாச்சி, மென்பந்து, கிரிக்கெட், ரெலே உடற்பயிற்சிப் போட்டிகள் ஆகியனவற்றை நடத்துவதற்குரிய விதிமுறைகள் குறித்தும் அவர் தமது சுற்று நிருபத்தில் குறிப்பிட்டுள்ளார். (இ-131)

மலேரியாவால் பீடிக்கப்பட்ட விவசாயிக்கு ஏற்பட்ட பயங்கரம்

கல்முனை, பெப். 22

பதினாறு தினங்களாக மலேரியாவினால் பீடிக்கப்பட்டிருந்த இளம் விவசாயி ஒருவர் நெற்றியில் சூடு பட்டு மரணமானார்.

அவருடனிருந்த அவரது வயோதிபத் தந்தை காயமடைந்தார்.

இப்பரிதாப சம்பவம் திருக்கோவில் பிரதேசத்திலுள்ள போட்டாக் குளத்தில் இடம் பெற்றது

சம்பவம் பற்றி காயமடைந்த தந்தையான தம்பிலுவில் இரண்டாம் குறிச்சியைச் சேர்ந்த சங்கமன் - கந்தையா (வயது 60) உதயன் செய்தியாளரிடம் தெரிவித்ததாவது:-

"நானும் எனது மகன் கிருஷ்ணராஜாவும் (வயது 25) எட்டு ஏக்கரில் நெற் செய்கை பண்ணி வந்தோம்

சம்பவ தினம் நானும் எனது மகனும் வயலிலுள்ள வாடியில் இருந்தோம்.

மகன் 16 தினங்கள் மலேரியாக் காய்ச்சலுடன் இருந்தார் சாப்பிட முடியாத அவர் தேநீர் கேட்டார்

நான் தேநீர் தயாரித்துக் கொண்டிருந்தேன் மலேரியாக் குளிசையை சாப்பிட கையில் வைத்திருந்தார் நானும் தேநீரை ஊற்றி அவரிடம் நீட்டினேன் அவர் வாங்குவதற்குள் அவரது நெற்றியில் எங்கிருந்தோ வந்த சூடு விழுந்தது.

அவ்வளவுதான் மகன் வாய்க்காலில் துடிதுடித்து விழுந்தார்.

அப்போது வாடியின் நாலா பக்கமும் பயங்கர வெடிச்சத்தங்கள் கேட்டன. மகனை கட்டி அணைத்து தூக்க முற்பட்டபோது எனது காலிலும் சூடு விழுந்தது.

மகனை ஒரு மாதிரியாக வாடியினுள் இழுத்து வளர்த்திவிட்டு நடக்கமுடியாத நான் அவரின் அருகே படுத்து விட்டேன்.

வாடியின் நாலாபக்கமும் சீருடைதரித்தவர்கள் ஓடி ஓடிச் சுட்டவண்ணம் திரிந்தனர் அவ்வேளை வாடியின் பக்கத்தில் மாடு மேய்த்துக் கொண்டிருந்த இரண்டு சிறுவர்களை சிப்பாய்கள் மண்டையில் அடித்து [illegible]. இவ்வளவையும் கண்ணுற்ற நான் [illegible]போல படுத்துக் கொண்டேன். இரவு முழுதும் மகனின் பிரேதத்துடனேயே படுத்திருந்தேன்;

காலையில் எழுந்து டிராக்டரில் மகனின் பிரேதத்

யாழ் மாவட்டத்தில் வீடமைப்புத் திட்டங்களுக்கு மேலும் 13 லட்சம் நிதி

யாழ்ப்பணம், பெப்.22

யாழ் மாவட்டத்தில் சென்ற வருடம் பூர்த்தியாகாத ஏழு வீடமைப்புத் திட்டங்களின் மிகுதி வேலைகளுக்கென 13 லட்சத்து 50ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

கட்டட வேலைகள் பூர்த்தியாகாமல் உள்ள புத்தூர் இந்துசிட்டி மாதிரிக் கிராமத்திற்கு ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபாவும்-

வேலணை சின்னமடு மாதிரிக் கிராமத்திற்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும்-

யாழ்ப்பாணம் [illegible] மாதிரிக் கிராமத்திற்கு ஒரு லட்சம் ரூபாவும்-

நல்லூர் பூம்புகார் மாதிரிக் கிராமத்திற்கு ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபாவும்-

கோப்பாய் யோகபுரம் சுயவீடமைப்புத் திட்டத்திற்கு ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபாவும்-

மயிலிட்டி மயிலுக்கட்டுவன் சுய வீடமைப்புத் திட்டத்திற்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டங்களில் சன சமூக நிலையங்கள் [illegible] 2 லட்சம் ரூபாவும் [illegible]கள், கிணறுகள் என்பன அமைப்பதற்கு 2 லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்

விளையாட்டரங்கு

ஷப்ரு ஆதரவு உதைபந்தாட்டம்:

சென்மேரீஸ், பொற்பதி அணிகள் வெற்றி

யாழ்ப்பாணம், பெப் 22

ஷப்ரு நிறுவனத்தின் ஆதரவுடன் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினரால் நடத்தப்படும் 7 பேர்கொண்ட விலக்குமுறையிலான உதைபந்தாட்டப் போட்டியில் சென்மேரீஸ் வெற்றி பெற்றது.

சென்மேரீஸுடன்கிறீன் பீல்ட்மோதியது. ஆட்டம் தொடங்கிய முதல 10 நிமிடத்தில் சென்மேரீஸ் முன்னணி வீரர் பஞ்சனின் அபார உதையின் மூலம் முதலாவது கோல் கிடைத்தது

எந்நேரமும் கிறீன் பீல்ட் கோல் அடிக்கும் நிலையில் இருந்த பொழுதிலும் சென் மேரீஸ் 1-0 கோல்களால் வெற்றி பெற்றது.

நடுவராக ஜனுப் என் எம் நசார் கடமையாற்றினார்.

இரண்டாவது நடைபெற்ற பொற்பதி— சென் அன்ரனீஸ் மோதல் விறுவிறுப்பாக ஆரம்பமாகியது

பொற்பதி முதலில் சீ. மகேந்திரக்குமார் மூலம் முதலாவது கோலைப் போட்டது.

இரண்டாவது கோலை சதீஸ்குமார் போட்டார். மூன்றுவது, நான்காவது கோல்களை மகேந்திரக்குமார் அடித்தார்.

இடைவேளையின் பின் சென் அன்ரனீஸ் தமக்கு கிடைத்த பனல்டி உதையையும் கோட்டை விட்டனர்.

அடுத்து விடாது போட்டி போட்ட அன்ரனீஸ் அன்ரனி மூலம் முதலாவது கோலைப் போட்டது.

பொற்பதி வீரரான ஆர். பவானந்தனின் வேக ஓட்டத்தின் முடிவில் ஒரு கோலைப் போட்டார்.

இறுதியில் 5-1 என்ற கோல்களால் பொற்பதி வெற்றி பெற்றது. (இ)

5 பேர் கொண்ட உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், பெப் 22

குருநகர் சென்ரேக் விளையாட்டுக் கழகத்தினரால் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படும் 5 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டியில் 8 கழகங்கள் பங்கு கொள்ளுகின்றன.

போட்டிகளைக் கழகத் தலைவர் திரு. எம். தேவதாஸ் செயலாளர் திரு. ஏ. விக்டர் ஆகியோர் சிறந்த முறையில் ஏற்பாடு செய்துள்ளனர்.

(இ)

மெய்வல்லுனர் போட்டி

யாழ்ப்பாணம், பெப்.22

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கழகங்களுக்கு இடையேயான மெய் வல்லுனர் போட்டி இன்று ஞாயிறு பிற்பகல் ஸ்ரான்லி கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக செயலக உதவி அரசாங்கஅதிபர் திரு கே. கோபாலரத்தினமும் சிறப்பு விருந்தினர்களாக ஸ்ரான்லிக்கல்லூரி அதிபர் திரு எம். இராமலிங்கம், முத்துத்தம்பி வித்தியாலய அதிபர் திரு. எம். முத்துலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்வார்.

நல்லூர் உதவி அரச அதிபர் திரு. எஸ் சண்முகநாதன் விளையாட்டு அதிகாரி செல்வி ந. யசோதா ஆகியோர் இப் போட்டிகளை ஒழுங்கு செய்துள்ளனர். (இ-எ)

மக்கள் முகம்

திருவள்ளுவர் சனசமூக நிலையம்

மானிப்பாய், பெப்.22

மானிப்பாயில் உள்ள திருவள்ளுவர் சனசமூக நிலையவருடாந்தபொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

நடப்பு வருட உத்தியோகத்தர்களாக பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: திரு. கே. இராஜசுந்தரம், திரு. எம். விஸ்வராஜா தலைவர் திரு. எஸ். சதாசிவம், உபதலைவர் திரு. எஸ். ஸ்ரீகுமார் செயலாளர்கள்: திரு. சி. வி. பரமேஸ்வரன், செல்வி ரஜனி சபாரத்தினம். பொருளாளர்: திரு. சி. சரிமுகன் கணக்குப் பரிசோதகர் திரு எஸ். மன்மதராசா.

மேலும் நிர்வாகசபை உறுப்பினர்களாக ஐந்து பேர் தெரிவு செய்யப்பட்டனர். (இ-90)

தென்மட்டுவில் கலைவாணி சனசமூக நிலையம்

சாவகச்சேரி, பெப்.22

தென்மட்டுவில் கலைவாணி சனசமூக நிலைய ஆண்டு நிறைவுப்பொதுக் கூட்டத்தில் நடப்பாண்டு உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு. வே. துரைச்சாமி (இளைப்பாறிய அதிபர்) உபதலைவர்: திரு எம். ஜெயசிங்கம் செயலாளர்: திரு. எஸ். தங்கராசா உபசெயலாளர்: திரு. எஸ். சுபதேவன் பொருளாளர்: திரு. கே. அரியதாஸ்.

மேலும் ஆறுபேர் நிர்வாக சபை உறுப்பினர்களாகவும் திரு. எஸ். பி பத்மசீலன் போஷகராகவும் திரு. த. பாலசிங்கம் கணக்குப் பரிசோதகராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

(-இ31)

நீடிப்பு

யாழ்ப்பாணம், பெப்.22

யாழ் மாவட்ட திரிசாரண குழுவினால் நடத்தப்பட்டு வரும் கொடி வாரம் இன்று 22 ஆம் திகதியில் இருந்துமேலும் ஒரு வாரம் நீடிக்கப்பட்டுள்ளது (இ)

சின்னஞ் சிறு விளம்பரங்கள்

வகுப்புகள்

8 மாதகால Cake Icing வகுப்புக்கள் ஆரம்பம். சனி, ஞாயிறு நாட்களில், இடம் 10/5 சிவன் வீதி, திருநெல்வேலி, (சென்றல் நேர்சிங் ஹோமிற்கு அருகில் உள்ள ஒழுங்கையில்)

சேவை

நாங்கள் பழைய அலுமாரி, பெட்டகங்கள், கதிரை, மேசைகள் எந்த நிலையிலும் கொள்வனவு செய்வோம். தொடர்பு கொள்ளவும் "நிப்பிலடர்ஸ்" 615, ஆஸ்பத்திரி வீதி. (காப்புறுதிக் கூட்டுத்தாபனம் எதிராக) யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24841.

பிரயாண ஒழுங்குகள்

Horizon Enterprises
OPEN VISAS

● ஓமான் ● குவைத்
● சவூதி

உடன் வேலை வாய்ப்பு!

நாம் குறிப்பிட்டபடியே உங்களது பயணத்திற்கான ஒழுங்குகள் செய்துதரப்படும்.

அன்றும், இன்றும் என்றும் எதுவித முரண்பாடுமில்லாது ஒன்பதாவது ஆண்டையும் பூர்த்திசெய்தும் தொடர்ந்தும் கண்ணியமாய் எமது முகவர் நிலையம் வடபகுதியில் முன்னோடியாய் இயங்கிக்கொண்டிருக்கின்றது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

✱ எமக்கு வடபகுதியில் வேறு கிளைகள் கிடையாது

பணிப்பெண்களுக்கான பிரயாண ஒழுங்குகள்

மிகவிரைவில் குறைந்த கட்டணத்தில் செய்து தரப்படும்.

லெபனான், அபுதாபி, சிங்கப்பூர், டுபாய் ஆகிய நாடுகளுக்கு

காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை நேரில் தொடர்பு கொள்ளவும்.

கடிதம் மூலம் தொடர்பு கொள்வோர் முத்திரை ஒட்டிய கவருடன் தொடர்பு கொள்ளவும். எமது முகவர் நிலையத்தினூடாக பயணம் மேற்கொண்டோர் விபரம் வாரந்தோறும் வெளியிடுகின்றோம்.

இவ்வாரம் பயணம் மேற்கொண்டோர் பெயர் விபரங்களை அடுத்தவாரம் பத்திரிகையில் காணலாம்.

உங்கள் (PASSPORT)

கடவுச் சீட்டுக்கள் குறித்த தவணையில் குறைந்த செலவில் செய்து தரப்படும்.

எம்மிடம் (PASSPORT) விண்ணப்பப் படிவமும் எல்லா நாட்டிற்கான சகலவிதமான முத்திரைகளும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ் முகவரி:
A. பத்மதாஸ்
மதுரா வீடியோ கிளப்,
இல 96, 4-ம் குறுக்குத் தெரு,
சின்னக்கடை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23549

கொழும்பு முகவரி:
HORIZON ENTERPRISES
No 87 2/1, Kollupittiya Lane,
Kollupittiya, COLOMBO-3.
T-phone: 574000

வியாபாரம் பெருக

லீடன் காமென்ஸ்

249, மின்சார நிலைய வீதி,
(தபினன்ஸ் கொம்பனி கட்டடம்,
ஆஸ்பத்திரியின் பின்பக்கம்)
யாழ்ப்பாணம்.

★ லீடன் தயாரிப்புக்கள்
★ போபி சூட்கேஸ்
★ பேபி சூட்டிங் வகைகள்
★ றெடிமேட் சேட் வகைகள்
★ சூட்டிங் வகைகள்
★ கவுண் வகைகள்
★ பலவர்ணச் சாறிகள்
★ சேட்டிங் வகைகள்

மற்றும்
சகல விதமான துணித் தேவைகளுக்கும் நாடவேண்டிய சிறந்த ஸ்தாபனம்

லீடன் காமென்ஸ்

உதய சங்கற்பம்

போதுமென்கின்ற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்.

— பைபிள்

உதயன்

இல,15,ஆவது ஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம் 22-02-1987 த.பெ.இல. 88

சுமையை மாற்றும் படுதந்திரம் இது!

இலங்கை நாட்டின் ஜனாதிபதி நாடாளுமன்றக் கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்துக் கடந்த வெள்ளிக்கிழமை உரையாற்றினார்.

இனப்பிரச்சினை விவகாரத்தையே அவர் தமது உரையின் பிரதான அம்சமாக்குவார் என எதிர்பார்க்கப்பட்டது அவர் அவ்வாறே செய்தார்; எனினும் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியதாக திருப்பம் எதையும் காணமுடியவில்லை. ராஜீவின் கடிதத்துக்குத் தாம் எழுதிய பதிலே அவரது உரையின் முக்கால் பங்காயிற்று.

அவரது பதில்— அல்லது உரை ஆறு அம்சங்களை உள்ளடக்கியதாக இருந்தது. கேட்பதற்குப் புதிதாக இருந்தபோதிலும் பழைய நிலையிலேயே ஜனாதிபதியும் அரசும் நிற்பதை அவை தெட்டெனக் காட்டுகின்றன

சமாதானப் பேச்சு என்ற இனிப்புப் பூசிய நச்சுக் குளிசையை அவர் தந்திருக்கிறார் எழுத்தமானத்தில் அவர் படியிறங்கி விட்டதாகக் காட்டிக் கொண்டாலும், தமது அடம்பிடியை இன்னும் தளர்த்தவில்லை

அவை மட்டுமா? அவர் தமது உரையில் பொய் மூடைகளையும் நிறைய அவிழ்த்து விட்டிருக்கிறார் அரச படைகள் பொதுமக்களை— தமிழ் மக்களைக் கொல்லவில்லை என்று முழுப் பூசினிக்காயை சோற்றில் புதைக்க முயற்சிக்கிறார்.

பிரச்சினையை அரசியல் ரீதியில் சமாதான முறையில் தீர்க்க விரும்புவதாகச் சொல்பவர் நிபந்தனைகள் விதிக்கிறார்! இது வேடிக்கை மிகுந்தது!!

போராளிகள் வன்செயல்களை நிறுத்த வேண்டும் என்கிறார் ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும் என்கிறார். அவர்கள் அதைச் செய்தால் நான் இதைச் செய்வேன்; அல்லா விட்டால் மாட்டேன் என்று 'தாச்சி' மறிக்கிறார்!

தமிழ் இளைஞர்கள் ஏன் ஆயுதம் ஏந்தினார்கள், யார் ஏந்த வைத்தவர்கள் என்ற யதார்த்தத்தைப் புரிந்து கொள்ள மறுக்கிறார்! புரிந்தும் புரியாதவராய் நடிக்கிறார்!!

அரசியல் தீர்வு என்ற தமது நாடகத்தின் உச்சக்கட்டம் ஒன்றை நடித்துக் காட்டியிருக்கிறார் அவர்.

அரசியல் தீர்வுதான் அவரது உண்மையான விருப்பமெனில் — நாட்டில் சமாதானம் நிலைக்க வேண்டும் என்று மனப்பூர்வமாக விரும்பின் அவர் செய்ய வேண்டியவை பல. உடனடியாகச் செய்து காட்ட வேண்டியவை சில இதோ!

1. வடக்கு, கிழக்கில் இராணுவ நடவடிக்கையை முற்றுமுழுதாக நிறுத்திப் போர் நிறுத்தத்துக்கு விருப்பம் என்பதைச் செயலில் காட்டவேண்டும்,
2. குற்றச்சாட்டு எதுவும் இல்லாது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களை விடுவிக்கவேண்டும்.
3; வடபகுதி மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகள், தொலைத்தொடர்புத் தடைகளை நீக்க வேண்டும்.

மேற்கண்ட மூன்று காரியங்களையாவது அரசு முன் உதாரணமாகச் செய்து காட்டிய பின்னர் போர் நிறுத்தம் குறித்து தமிழ்ப் போராளிகளின் ஒத்துழைப்பைக் கேட்டால் அதில் நியாயமுண்டு

சமாதானத்தில் அரசியல் தீர்வில் அரசுக்கு நம்பிக்கை உண்டு என்பதைக் காட்டுவதற்கு நல்லெண்ண நடவடிக்கைகளாக இவற்றைச் செய்யலாம்.

அதை விடுத்து சமாதானப் பேச்சுக்கு நான் தயார், ஆனால் நீங்கள் தான் நான் கூறும் நிபந்தனைகளை ஏற்க வேண்டும் என்று கூறுவது, கொக்கை விருந்துக்கு அழைத்து, தட்டில் கூழ் ஊற்றி வைத்த கதையாகும் இது தமிழர்களையும் அவர்களது பிரதிநிதிகளான போராளிகளையும் கேலி செய்வதும் ஆகும்.

ராஜீவ் தமது கடிதத்தில் தெரிவித்திருந்த இராணுவ நடவடிக்கை நிறுத்தம், பொருளாதாரத் தடைநீக்கம் ஆகிய நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ள அல்லது நிறைவேற்றப் பின் நிற்கிறார் ஜே. ஆர். அவற்றை நிறைவேற்றுவதற்குப் பதிலாக போராளிகளுக்கு நிபந்தனை விதிக்கிறார். தமக்கு மேல் சுமத்தப்பட்ட சுமையை மற்றவனுக்கு மாற்றும் தந்திரம் இது!

இது ராஜீவை ஏய்க்காட்டுவதாகவும் போராளிகளை நிர்ப்பந்திப்பதாகவும் உள்ளது.

ராஜீவை விடத் தான் பெரும் ராஜதந்திரி, தந்திரசாலி என்பதைக் காட்டுவதற்காகத் தான் ஜே. ஆர். இப்படி நடந்து கொண்டாரோ?

அவரது ராஜதந்திரத்துக்கும், தந்திரத்துக்கும் ராஜீவ் ஏமாந்து போகலாம். ஆனால் தமிழர்கள் ஏமாறமாட்டார்கள்.

சிலரைச் சில காலம் ஏமாற்றலாம். எல்லோரையும் எல்லாக் காலமும் ஏமாற்ற முடியாது. இதனை உணராத ஜே ஆரும், அவரது அரசினரும் ஒரு நாள் எவராலோ ஏமாற்றப்பட்டே ஆவர் என்பது நிச்சயம்!

தொலைக்காட்சி காலை சேவை ஆரம்பம்

சென்னை,பெப். 21

அகில இந்திய தொலைக் காட்சிச் சேவை தனது காலை நிகழ்ச்சிகளை நாளை திங்கட்கிழமை ஆரம்பிக்கின்றது.

45 நிமிட நேர இந்த ஒலிபரப்பு காலை 7.30 மணிக்கு தொடங்கும்.

சுப்ரபாதம் எனும் காலைநேர சாஸ்திரிய இசையும், 10 நிமிட இந்தி செய்தி அறிக்கையும் ஆங்கில செய்தி அறிக்கையும் இந்த ஒலிபரப்பில் தினசரி இடம்பெறும். (ஒ)

லெபனானுக்கு உதவ

சிரியப் படைகள் விரைவு

ஆஸாத்துடனான ஒப்பந்தம் உடனடியாக நிறைவேற்றம்

டமாஸ்கஸ் பெப். 21

லெபனானில் மேற்கு பெய்ரூட்டை நோக்கி சிரியா துருப்புகளும் டாங்கிகளும் சென்று கொண்டிருக்கின்றன.

லெபனான் வன்செயல்களை முடிவுக்குக் கொண்டுவர சிரியாவின் உதவியை லெபனான் தலைவர்கள் கோரியதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை.

முஸ்லிம் மக்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் இப்படைகள் இன்று அதிகாலை முதல் முன்னேறிச் செல்கின்றன.

சிரியா ஜனாதிபதி ஆஸாத்துடன் டமாஸ்கஸில் நேற்று லெபனானின் ஐந்து முக்கிய தலைவர்கள் சந்தித்து அறிக்கையொன்றில் கைச்சாத்திட்டனர்.

லெபனானில் நடைபெற்று வரும் குழுச் சண்டைகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு சிரியா உதவியை நாடுவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

பிரிட்டனிடம் கோரிக்கை

லண்டன், பெப். 21

தென்னாபிரிக்காவிற்கு எதிராக பிரிட்டிஷ் அரசாங்கம் கடுமையான பொருளாதார நடவடிக்கைகளைக் கொண்டு வர வேண்டும் என ஆபிரிக்க ஒருமைப்பாட்டு ஸ்தாபனத்தலைவர் கொங்கோ ஜனாதிபதி டெனிஸ்சசோ என்றாசோ கேட்டுள்ளார்.

ஐரோப்பிய சுற்றுப் பயணத்தின் இறுதிக் கட்டமாக லண்டன் சென்றுள்ள அவர் பிரிட்டிஷ் பிரதமர் மாகிரட் தட்சரைச் சந்தித்து இவ்விதம் கேட்டுக் கொண்டார். (ஒ)

இந்தோனேஷிய கடற்படை விஸ்தரிப்பு

ஜகார்த்தா, பெப். 21

இந்தோனேஷியா அதன் கடற்படையை விஸ்தரிக்கத் தொடங்கியுள்ளது

கடல்வலயத்தில் பெருமளவு எண்ணெய் வளத்தைக் கொண்ட நாடான இந்தோனேஷியா அதன் சொந்த நலனை முன்னிட்டு கடற்படையை விஸ்தரிப்பது அவசியமானது என ஜனாதிபதி கார்டோ தெரிவித்தார்.

ஒல்லாந்து கடற்படையிடமிருந்து ஏற்கனவே 5 யுத்தக் கப்பல்களை இந்தோனேஷியா வாங்கி உள்ளது.

இந்தோனேஷியா மேலும் 10 யுத்தக் கப்பல்களை வாங்க உள்ளது. இதனால் தென் கிழக்கு ஆசியாவிலேயே மிகப் பெரிய கடற்படையைக் கொண்ட நாடாக விளங்கும். (ஒ)

வாஷிங்டனில் ஷாமிர்

வாஷிங்டன், பெப் 21

இஸ்ரவேல் பிரதமர் இசாக் ஷாமிர் வாஷிங்டனில் அமெரிக்க அதிகாரிகளுடன் மேலும் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார்.

மத்திய கிழக்கு சமாதான முயற்சிகள் பற்றியும் ஈரானுக்கான ஆயுத விற்பனை விவகாரத்தில் இஸ்ரவேலிற்கு இருந்த தொடர்பு பற்றியும் அவர் ஜனாதிபதி றேகனுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தார். (ஒ)

'எய்ட்ஸ்' பரவுவது மகாராணிக்குக் கவலை

லண்டன், பெப்.21

எய்ட்ஸ் நோய் பிரிட்டனில் பரவுவது குறித்து எலிஸபெத் மகாராணி கவலை தெரிவித்தார்.

லண்டனில் உள்ள பிரதான ஆஸ்பத்திரிக்கு நேற்று விஜயம் செய்த எலிஸபெத் மகாராணி அங்கிருந்த வைத்திய நிபுணர்களிடம் எய்ட்ஸ் நோய் பற்றிக் கேட்டறிந்து கொண்டார்.

எய்ட்ஸ் நோயை தடுக்கும் மருந்து ஒன்றைக் கண்டு பிடிப்பதில் பிரிட்டிஷ் வைத்திய நிபுணர்கள் தீவிரமாக ஈடுபட்டிருப்பதாக ஆஸ்பத்திரியில் பணியாற்றும் வைத்திய நிபுணர் ஒருவர் மகாராணிக்குத் தெரிவித்தார்.

எய்ட்ஸ் நோய் காரணமாக பிரிட்டனில் இதுவரை 350 பேர் இறந்து விட்டனர்.

1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் சுமார் 4,000 பேர் உயிரிழப்பர் என்று மகாராணிக்குத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

நிராகரிப்பு

தென் ஆபிரிக்காவிற்கு எதிராக உலகம் முழுவதிலுமிருந்து விரிவான பொருளாதாரத் தடை விதிக்குமாறு ஐ நா. சபை விதித்த தீர்மானத்தை அமெரிக்காவும் பிரிட்டனும் தமது ரத்து அதிகாரத்தைப் பயன்படுத்தி நிராகரித்து விட்டன. (ஒ)

எல்லைத்துருப்புக்கள் திருப்பி அழைப்பு

புதுடில்லி,பெப் 21

இந்தியாவும் பாகிஸ்தானும் தத்தமது எல்லைப் பகுதிகளில் இருந்து ஒருலட்சத்து ஐம்பதினாயிரம் துருப்புக்களை திருப்பி அழைக்கின்றன.

சிலவாரங்களுக்கு முன்னர் இரு நாடுகளும் எல்லைப்பகுதிகளில் துருப்புக்களைக் குவிக்கத்தொடங்கியதால் ஏற்பட்ட பதற்றம் இதனால் நீங்கியுள்ளது

எல்லைப்பகுதி நெருக்கடிகளை முற்றாகவே நீக்குவதற்கும், உறவுகளைச் சீர்படுத்துவதற்கும் இந்திய பாகிஸ்தான் தலைவர்கள் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டுள்ளனர்.

1985 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஜனாதிபதி ஸியா இந்தியாவில் பேச்சு வார்த்தை நடத்திய போதும் இரு தரப்பு உறவுகளை விருத்திசெய்வதற்கு அதனால் பயன் ஏதும் ஏற்படவில்லை என்பது தெரிந்ததே.(ஒ)

வெளி உலகில்

ஹிட்லர் மற்றிய புதிய சர்ச்சை!

புலனர்ஸ் அயர்ஸ், பெப். 21

இரண்டாம் உலகப் போரில் சர்வாதிகாரி அடல்ப் ஹிட்லர் தற்கொலை செய்துகொண்டதாக அறிவிக்கப்பட்டது வெறும் வதந்தியாகும். உண்மையில் அவர் நான்கு மாதங்களுக்கு முன்னர் வட ஆஜென்டீனாவில் இயற்கையான முறையில் மரணமானார்.

இவ்வாறு ஹிட்லர் பற்றி நூல் ஒன்றை வெளியிட்டுள்ள ஆஜென்டீனாவின் பிரபல வர்த்தகர் ஒருவர் தமது புத்தகத்தில் தெரிவித்துள்ளார்.

இதற்கான தகுந்த ஆதாரங்கள் தம்மிடம் இருப்பதாகக் கூறும் அந்த எழுத்தாளர் அதனை மறுப்பவர்களுக்கு ஒரு கோடி டாலர் சன்மானம் அளிக்கப் போவதாகவும் அறிவித்துள்ளார்.

ஹிட்லரின் மனைவி வட ஆஜன்டீனாவில் நோய் வாய்ப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பான இடத்தில் வசிப்பதாகவும் தெரிவித்த அந்த எழுத்தாளர் இன்னமும் நேரில் ஹிட்லரின் மனைவியைச் சந்திக்கவில்லை எனவும் தெரிவித்தார். (ஒ)

ஈழத்தின் புகழ் ஓங்கச் செய்த அ. செ. மு.வின் சிறுகதை நூல்

'மனிதமாடு' தொகுதி இன்று வெளியிடப்படுகிறது

ஈழத்தின் பழம் பெரும் எழுத்தாளரும், பத்திரிகையாளருமான திரு. அ. செ. மு. தமது இலக்கியச் சிருஷ்டிகள் மூலம் பிறந்த மண்ணின் புகழ் ஓங்கச்செய்தவர்

அவரது சிறு கதைகளைக் கொண்ட தொகுதி ஒன்றை வெளியிட வேண்டும் என்ற முயற்சிகள் பல தடவைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இன்று தான் கைகூடுகிறது ''மனிதமாடு'' சிறுகதைத் தொகுதியை யாழ் மாவட்டக்கலாசாரப் பேரவையின் இலக்கியக்குழு இன்று வெளியிட்டு வைக்கின்றது.

அதனை முன்னிட்டு— சிறு கதைத் தொகுதிக்கு திரு. சி. சிவசரவணபவன் (சிற்பி) எழுதிய பதிப்புரையில் இருந்து ஒரு பகுதியை இங்கு வெளியிடுகின்றோம்.

யாழ் மாவட்ட இலக்கியக் குழு, 1986–1987 இற்கான செயற்திட்டத்தைத் தயாரித்துக் கலாசாரப் பேரவையின் அங்கீகாரத்தைப் பெற்றது.

பழம்பெரும் எழுத்தாளர்களான அ. செ. முருகானந்தன் க. தி. சம்பந்தன், சி. வைத்திய லிங்கம், அமரர் அ. ந. கந்தசாமி ஆகியோரின் சிறந்த சிறுகதைகளைத் தெரிவு செய்து அவற்றைத் தனித் தனித் தொகுதிகளாக வெளியிடுதலும் எழுத்தாளர் விபரக் கொத்து ஒன்றை வெளியிடுதலும் திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும்.

கலாசாரப் பேரவையின் முதலாவது வெளியீடாக திரு. அ. செ. முருகானந்தன் அவர்களின் 'மனித மாடு' என்ற இந்தச் சிறுகதைத் தொகுதி மலர்கின்றது.

ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை முன்னோடிகள் என்ற பெருமைக்குரியோர் சி. வைத்தியலிங்கம், அமரர் இலங்கையர்கோன், க. தி. சம்பந்தன் ஆகிய மூவர், ஈழகேசரி வாயிலாகத் தமிழ் இலக்கிய உலகில் கால்பதித்த இவர்கள், ஈழத்திலும் தமிழ் நாட்டிலும் வெளியான தரமான சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் தமது ஆக்கங்களை வெளியிட்டுத் தமிழ்த் தாயை அணி செய்து தாமும் புகழ் சேர்த்தனர். தலைசிறந்த தமிழ்ச் சிறுகதைகளின் தொகுப்புக்களான கதைக் கோவை (அல்லயன்ஸ் கம்பனி, மைலாப்பூர், சென்னை), ''ஈழத்துச் சிறுகதைகள்'' (தமிழருவிப் பதிப்பகம், சுன்னாகம்,) ஆகியவற்றில் இவர்களுடைய சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. இவர்களை அடியொற்றி இலக்கியஞ் செய்ய விழைந்த இளைஞர் சிலர் 1943 ஆம் ஆண்டிலே யாழ்ப்பாணத்தில் மறுமலர்ச்சிச் சங்கம் என்ற அமைப்பை உருவாக்கி மறுமலர்ச்சி மாத இதழையும் வெளியிட்டனர். மறுமலர்ச்சிச் சங்கத்தின் தலைவராகவும் மறுமலர்ச்சி இதழின் இணையாசிரியராகவும் பணி புரிந்தவர் திரு. அ. செ. முருகானந்தன்.

பழமையின் நல்ல அம்சங்களை உள்வாங்கிக் கொண்டு, அவற்றை அடித்தளமாக்கிப் புதுமை புனைந்த அ. செ.மு. நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகளை ஆக்கியுள்ளார். அவற்றுட் பல, உருவத்தாலும் உயிரான உள்ளடக்கத்தாலும் நடையாலும் நகர்த்தும் சம்பவங்களாலும் சிறப்புப் பெற்றவை.

வெவ்வேறு உத்திகளைக் கையாண்டு சுவையாகக் கதை சொல்லும் அவர். பிரசார வாடை சிறிதும் இன்றி, அழகான உண்மைகளை மிக [illegible] பதித்து விடுகி[illegible] சம்பவங்கள், அவர் சொல்லும் முறையால் இலக்கியமாகின்றன. அவருடைய தமிழ் நடை தெளிவான இலகுநடை; தேவையான இடங்களில் அவர் கையாளும் பேச்சுத் தமிழ் அதற்கு உயிரூட்டுகின்றது; இலக்கியத் தொடர்களும் அளவான பிறமொழிச் சொற்களும் மெருகூட்டுகின்றன. மெல்லிய நகைச்சுவையும் 'நாசூக்'கான கிண்டலும் இடையிடையே உண்டு; தனித்துவம் மிக்க அவருடைய வர்ணனைகள், அழகுமயிலின் ஆனந்த நடனமாய்க் கண்களுக்கு எழிலூட்டுகின்றன. கதைகளில் வீசும் கிராமிய மணம் வாசகர்களை இதமாக வருடுகின்றது.

ஈழகேசரி, மறுமலர்ச்சி, கிராம ஊழியன், எரிமலை, நவஜீவனம், சுதந்திரன், வீரகேசரி, தினகரன், ஈழநாடு, சிந்தாமணி, மாருதம், விவேகி, புதிசு, சிலம்பொலி முதலிய பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் அவருடைய சிறுகதைகள் வெளிவந்துள்ளன. கதைக்கோவையில் 'மனிதமாடு' சிறுகதையைச் சேர்த்ததன் மூலம் தமிழ்கூறும் நல்லுலகு அ. செ. மு. வின் இலக்கிய ஆற்றலையும் ஆளுமையையும் அன்றே அங்கீகரித்து விட்டதெனலாம்.

தமது இலக்கிய சிருஷ்டிகள் மூலம் ஈழத்தின் புகழை ஓங்கச் செய்த அ. செ. மு. அவர்களின் சிறுகதைத் தொகுதியொன்றை வெளியிடுவதற்கு இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் பல ஆண்டுகளுக்கு முன்னர் முயற்சியை மேற்கொண்டது; ஆனால் அவை பலனளிக்கவில்லை. அ. செ. மு அவர்களின் மணிவிழாவையொட்டி மீண்டும் ஒருமுயற்சி அவருடைய நண்பர்களால் மேற்கொள்ளப் பட்டது. அதுவும் கைகூடவில்லை. இத்தொடர்பில் யாழ்ப்பாண மாவட்டக் கலாசாரப் பேரவையின் இலக்கியக்குழு [illegible] 'மனிதமாடு' எழிலோடு மலர்கின்றது. ✶



பொய்யாமொழி

குறள்:

கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானும் வேந்தர்க் கொளி.

பொருள்:

கொடை, அருள், செங்கோல்முறை, தளர்ந்த குடிகளைக் காத்தல் ஆகிய நான்கும் உடைய அரசன், அரசர்க்கெல்லாம் விளக்குப் போன்றவன்.

இயேசுவின் திரு இரத்தம்

நாம் வாழும் இவ்வுலகத்தை நாலாதிக்கிலும் பார்க்கும்போதும் அதன் சரித்திரத்தைப் படிக்கும் போதும் இவ்வுலகம் இரத்தம் சிந்தப்படும் களமாகவே எங்கும் சிவந்து காட்சியளிக்கின்றது.

மனித வர்க்கமாகிய நாம் எம்மை நாமே பகைத்து வெறுத்து அழித்து அவதியுறும் காட்சியைக் கண்டு வெட்கித் தலை குனிய வேண்டும்.

இந்த அழிவுச் செயல்களை வீரகாரியங்களாக்கி பெருமை கொள்கிறோம்.

எமது இந்நிலை மிகவும் பரிதாபப்பட வேண்டிய நிலையாகும்.

நாம் அழித்த எமது சகோதரர் உயிர்கள் ஒன்று இரண்டா- பல நூறுகோடி தேறுமல்லவா? இவர்களில் இருந்து வழிந்தோடும் இரத்தம் ஒரு பெரும் நதிக்குச் சமமானதல்லவா? இதை நினைக்கும்

போது ஒரு பயங்கர உணர்வு எம் உள்ளத்தை வாட்டுகின்றது.

இந்த இரத்த நதி ஓடும் சிவந்த பூமியிலே தான் நாம் வாழப் பிறந்திருக்கிறோம் எனும்போது இது எமக்குக் கிடைத்த சாபக்கேடோ, தண்டனையோ என்றே சிந்திக்க வேண்டியிருக்கின்றது.

மனிதன் தனது மானிட சகோதரனது இரத்தத்தை சிந்த வைப்பதற்குக் காரணம் அவனில் உருவாகும் தீய உணர்வுகளும் பேராசைகளுமாகும் நாம் அதைப் புரிந்து கொள்ளலாம்.

ஞானக்கதிர்

ஆனால் நீதி, நியாயம், தர்மம், இலட்சியம் என்று இலக்கணம் தீட்டி மாற்றான் இரத்தத்தை சிந்த வைப்பது தான் இன்று எம்மால் புரிந்து கொள்ள முடியாத செயலாகும்.

இந்த உலகில் படிந்துள்ள இரத்தக்கறையை (பாவக்கறை) போக்க சிந்தப்பட்ட இரத்தம் தான் இயேசுவின் திரு இரத்தம். இது வாழ்வு கொடுக்கும் இரத்தமாகவே இவ்வுலகில் சிந்தப்பட்டது. புது ஜீவனை இவ் இரத்தம் எம் இரத்தத்தோடு கலக்கிறது. இது எம்மை இந்த உலகின் சாபக் கேட்டில் இருந்து விடுவிக்கின்றது. எமது வாழ்வின் நீதி நியாயங்களை இலட்சியங்களை சீர்ப் படுத்தித் தூய்மைப் படுத்துகின்றது.

எம்மில் கலந்து விடுகின்ற அவரது திரு இரத்தம் மற்றவரது வாழ்வை அழிக்க அல்ல- மற்றவனுக்கு வாழ்வு அளிக்க ஏவுகின்றது. அயலவனை (தேவையில் வாடுவோனை) அணைத்து ஆதரவு காட்ட எம்மைத் தூண்டுகின்றது. ஏன்? எம் எதிரியைப் பகைக்க அல்ல நேசிக்க. அவனுக்காக எமது இரத்தத்தையே வாரிக் கொடுக்க எம்மை உந்துகின்றது.

இன்று உலகின் சாபத்தைப் போக்கி அதன் சாயலை மாற்றவல்லது இயேசுவின் திரு இரத்தமே அன்றி வேறில்லை.

அவ்விரத்தம் எம்மில் நிறைவாக இன்று ஓடட்டும். உயிர் குடிக்கும் அரக்கராக அல்ல. வாழ்வளிக்கும் தேவசாயலைப் பெற்ற மனிதர்களாக எம்மை மாற்றட்டும். ✶

அருட்திரு.கே.பி கோவிந்தராஜ்

துக்கம் அனுஷ்டிப்பு

நெடுங்கேணி,பெப். 22

தவறுதலாக இடம் பெற்ற குண்டு வெடிப்பில் உயிரிழந்த போராளிகளுக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக நெடுங்கேணிப் பகுதி வீதிகளில் தோரணங்களும் கறுப்புக் கொடிகளும் கட்டப்பட்டிருந்தன. (இ–108)

டெலிவிஷன் கணக்கெடுப்பு

கிளிநொச்சி, பெப்.22

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சகல கிராம சேவையாளர் பிரிவுகளிலும் உள்ள தொலைக் காட்சிப் பெட்டிகளைக் கணக்கெடுக்கும் வேலைகள் தற்போது ஆரம்பமாகியுள்ளன.

இக் கணக்கெடுப்பு வேலைகளில் கிராமசேவகர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (இ–76)

COMPUTER PROGRAMMING
BASIC LANGUAGE
Commencement 24th January
வகுப்புகளும், செய்முறைகளும்
பாதுகாப்பான இடத்தில்
60 மணித்தியாலங்களுக்குக் குறையாத
Practicals
பயிற்சி, முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்
வெளிநாடு செல்பவர்களுக்கான வரப்பிரசாதம்
Cantabia Institute
21, Main Street, Jaffna, Phone: 24204
13, Rasavinthodam Lane Jaffna.

உதயன்

22 - 02 - 1987 ஞாயிற்றுக்கிழமை

COMPUTER PROGRAMMING
BASIC LANGUAGE
6 Months
Weekend Classes
Fees: Rs 1500/-
Commencement 24th January 1987
JOIN THE LEADERS
Cantabia Institute
21, Main Street, Jaffna. Phone: 24201
13, Rasavinthodam Lane,, Jaffna.

வித்தாரம்

ஹலோ முரளி! எப்பிடி? எங்கே போய் வாறீர்? ஓ, வெளிநாட்டு ஏஜன்சிப் பக்கமோ? என்ன நீ வெளிநாட்டுக்குப் போக நினைக்கிறியோ?

அதுதானே கேட்டேன்! காசு குடுத்து ஏமாந்த சொந்தக்காறற்றை காசைக் கேட்டு வாங்கப் போனனீரோ!

உது பெரிய தில்லுமுல்லுகள். காசை வாங்கிறதுக்காக இந்தா அடுத்த கிழமை அங்கை போகலாம், இஞ்சை போகலாம் எண்டு ஆசை வார்த்தை கூறுவினம் காசு வாங்கின உடனே பெரிய கனவான்கள் மாதிரி பயணம் பிழைச்சால் காசு திருப்பித் தரப்படும் எண்டு முத்திரை ஒட்டி ஒப்பமும் வைத்துக் கடிதமும் குடுப்பினம்

பிறகு நாள் இழுபடும். பயணமும் இல்லை; காசும் இல்லை அவையின்ரை பின்னாலை அலையவேண்டியதுதான்.

அப்பிடி இல்லை எண்டு விமானத்திலை ஏற்றிறாய்ப்புச் செய்து தந்தினம் எண்டால் ஒண்டில் இந்தியாவிலை போய் முடியும்; அல்லாட்டால் பங்களாதேஷிலை முடியும். முந்தி பாகிஸ்தானும் அதிலை ஒண்டாய் இருந்தது. இப்ப அது இல்லை.

எனக்குத் தெரியும் இஞ்சை இருந்து வெளிநாடு எண்டு போன பலபேர் மாதக் கணக்காய் இந்தியாவிலை ஒண்டும் செய்யமுடியாமல் திண்டாடுகினம். பிரிட்டனுக்குப் போய் அவமானப்பட்டவை பங்களாதேஷில் இருந்து போனவைதானே!

எந்தெந்த நாடுகளிலை என்னென்ன விசா, பாஸ்போர்ட் கட்டுப்பாடுகள் இருந்தாலும், 'ஜிம்மாளம்' போட்டு வெண்டிடலாம் எண்டு இவை நினைக்கிறது எப்பவும், எல்லா இடத்திலையும் உவையின்ரை பயறு அவியிறது கஷ்டம்

இனிமேலும் வெளிநாட்டுக்குப்போக நினைக்கிறவை சுத்த மடையர். மேல்நாடுகள் எல்லாம் கதவை நல்லாய் இறுக மூடியிட்டினம். கடைசியாய் கனடாவும் எல்லே கட்டுப்பாடுகள் போட்டிருக்கு!

* * *

என்ன அரசாங்கத் திரை மீடியா சொன்னாலும், ராணுவ அதிகாரிகளும் நேரத்துக்கு நேரம் ஒவ்வொண்டாச் சொல்லுகினம்.

போராளிகள் மீது தொடுத்த இராணுவ நடவடிக்கைகள் முடிந்து விட்டதாய் ஒருக்காச் சொல்லுகினம். பெற நினைத்ததைப் பெற்று விட்டதால் இனி நடவடிக்கை இல்லை எண்டும் சொல்லிச்சினம்.

தாங்கள் பெரிய சாதனையைப் புரிஞ்சபோதிலும் மேலும் தங்கட நடவடிக்கையள் தொடரும் எண்டு மற்றப்பக்கத்தாலையும் சொல்லுகினம்.

ஒவ்வொரு அதிகாரி ஒவ்வொரு அபிப்பிராயம்! என்ன செய்யிறதெண்டு அவையுக்குள்ளேயே தெளிவில்லை எண்டதுதான் அதுகின்ரை அர்த்தம்!



பத்திரிகைத்துறை பயிலுநர்களுக்கான விண்ணப்பம்

- உதயன் பத்திரிகை நிறுவனம் ஆர்வமும், துடிப்புமுள்ளவர்களுக்கு பத்திரிகைத்துறை பயிற்சியை வழங்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.
- பத்திரிகைத் துறைசார்ந்த வல்லுநர்கள் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டு விரிவுரைகள் வழங்குவார்கள்.
- ஆறு மாத கால வார இறுதி/பகுதி நேர பயிற்சியை மேற்கொள்ளுபவர்களுக்குப் பயிற்சி கால முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும் (சான்றிதழ்கள் வழங்கும்போது திறமை, ஒழுக்கம், வரவு போன்றவை கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும்)

தகைமைகள்:

1 21 வயதிற்கும் 30 வயதிற்கும் உட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
2. (அ) க. பொ. த (உயர்தரம்) பரீட்சையில் தமிழ் மொழியில் விசேட சித்தியுடன் சித்தியடைந்திருக்க வேண்டும் அல்லது
(ஆ) க. பொ த (சாதாரணதரம்) பரீட்சையில் தமிழ்மொழி, ஆங்கிலம் ஆகிய பாடங்களில் விசேட சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்
3. மேலதிக ஆங்கில அறிவுடன் பத்திரிகைத்துறை சார்ந்த அனுபவமும் விசேட தகைமைகளாகக் கொள்ளப்படும்.

- பயிற்சிக் காலத்தில் எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது. பயிற்சி முடிவில் தொழில் வழங்குவதற்கான உத்தரவாதம் இல்லை
- விண்ணப்பப் படிவங்களை எமது அலுவலகத்தில் நேரிலோ அல்லது தபால் மூலமோ பெற்றுக் கொள்ளலாம். (தபால் மூலம் பெற்றுக் கொள்ள விரும்புகின்றவர்கள் சுய முகவரி இட்ட தபால் தலை ஒட்டிய, கடித உறையை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்).
- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் பொது முகாமையாளர், உதயன் பத்திரிகை நிறுவனம், அஞ்சல் பெட்டி எண்-23, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 28-2-87 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்கப்படவேண்டும்
- விண்ணப்பங்களை அனுப்பும்போது அஞ்சலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "பத்திரிகைத் துறை பயிலுநர்களுக்கான விண்ணப்பம்" என்று குறிப்பிடப்பட வேண்டும்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி. இரண்டாம் ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 22-02-1987 தொலைபேசி இல. 24805 23073

Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Second Lane, Power House Road, JAFFNA.

Registered as a News-paper at the General Post Office. Under Number QJ / 94 / N/ 87

கிளிநொச்சி தபாலகம்

கமநல சேவை நிலையத்துக்கு

வியாபார நிலையங்களை திறக்கவும் வற்புறுத்து

கிளிநொச்சி, பெப் 22

பரந்தன் தபால் நிலையக் கட்டடத்தின் மேல் மாடியில் இயங்கிவந்த கிளிநொச்சி பிரதம தபால்நிலையம் அடுத்த வாரம் முதல் கிளிநொச்சி கமநல சேவை நிலையக் கட்டடத்தில் இயங்கக்கூடும் என அறியப்படுகிறது.

இதற்கான உத்தரவை கிளிநொச்சி இராணுவம் தபால்நிலைய அதிபருக்குத் தெரிவித்ததாக அறியப்படுகிறது கடந்த யூன் மாதம் 4 ஆம் திகதி கிளிநொச்சியில் ஏற்பட்ட அசம்பாவிதம் காரணமாக கிளிநொச்சி பிரதம தபால் நிலையம் பரந்தனுக்கு தற்காலிகமாக இடம் மாற்றப்பட்டிருந்தது.

கடந்த 10 ஆம் திகதி முதல் பரந்தன் பகுதியை இராணுவம் முற்றுகையிட்டதைத் தொடர்ந்து கிளிநொச்சி அரச அலுவலகங்கள் யாவும் கிளிநொச்சியில் பழைய இடங்களுக்கு இடமாற்றுமாறு இராணுவம் உத்தரவிட்டிருக்கிறது.

இவ் உத்தரவின்பேரில் கிளிநொச்சி பிரதம தபாலகக் கட்டடத்தில் ஏற்கனவே இராணுவம் முகாமிட்டுள்ளதைத் தபாற் திணைக்களம் சுட்டிக்காட்டிய போதே தபாலகத்தை கிளிநொச்சி கமநல சேவை நிலையக் கட்டடத்தின் ஒரு பகுதியில் இயங்க வைக்குமாறு இராணுவ அதிகாரி உத்தரவிட்டுள்ளாராம்.

இது இவ்வாறிருக்க கடந்த பத்தாம் திகதி முதல் பரந்தன்பகுதியில் ஏற்பட்ட அசம்பாவிதங்களைத் தொடர்ந்து பரந்தன், கிளிநொச்சி தபால் நிலையங்களில் வைக்கப்பட்டு இருந்த பணம், பெரும் தொகையான முத்திரைகள் என்பன சூறையாடப்பட்டிருப்பதாகவும், சகல கடிதங்களும் சேதப்படுத்தப் பட்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

இதற்கிடையில் பரந்தனில் இயங்கிவந்த சந்தை, வியாபார நிலையங்கள் என்பன சேதப்படுத்தப் பட்டுள்ள நிலையில் மூடப்பட்டுள்ளன. மக்களின் நடமாட்டமும் குறைந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து இராணுவத்தினர் வர்த்தகர்களை அழைத்து கிளிநொச்சியிலிருந்து இடம் பெயர்ந்து பரந்தனுக்கு வந்த வர்த்தகர்களை உடனடியாக கிளிநொச்சிக்கு செல்லுமாறும், பரந்தன் வர்த்தகர்களை, பரந்தனில் வர்த்தக நிலையங்களைத் திறக்குமாறும் உத்தரவிட்டுள்ளனர்.

அத்துடன் ஜெயந்திநகர், முரசுமோட்டை, வட்டக்கச்சி ஆகிய இடங்களுக்கு நடைபவனியாகச் சென்று வரும் சிப்பாய்கள் அவ்விடங்களில் உள்ள சந்தைகளை விட்டு வியாபாரிகள் அனைவரையும் கிளிநொச்சி புதிய சந்தைக்கு வருமாறு பணித்துள்ளதாகவும் அறியவந்துள்ளது. ஜெயந்திநகரில் இருந்த தற்காலிகச் சந்தை தீயிட்டுக் கொளுத்தப் பட்டதாகவும் கூறப்படுகிறது (அ-76)

விளையாட மறுத்ததுக்கு கவாஸ்கர் கூறும் காரணம் சரியா?

புதுடில்லி, பெப். 21

கல்கத்தா டெஸ்டில் கலந்துகொள்ள மறுத்ததற்கு சுனில் கவாஸ்கர் கூறிய காரணம் சரியானது அல்ல.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் திரு. என். ஸ்ரீராமன் முன்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

''கல்கத்தாவில் முன்னர் விளையாடியபோது ரசிகர்கள் கூச்சலிட்டதுதான் இம்முறை விளையாட மறுப்பதற்குரிய காரணமா? இப்படி நான் கவாஸ்கரைக் கேட்டேன்.

அப்படி இல்லை என்று கவாஸ்கர் மறுத்தார். கல்கத்தாவில் இம்முறை விளையாட மறுத்ததற்கு கவாஸ்கர் கூறிய காரணம் சரியானது அல்ல; திருப்திகரமானதும் அல்ல.

நவம்பரில் நடைபெற உள்ள உலக கிண்ணப் போட்டியிலும் அதைத் தொடர்ந்து நடைபெறவுள்ள மேற்கிந்திய அணிக்கு எதிரான மோதலிலும் கவாஸ்கர் விளையாடுவார் என்று நம்புகின்றேன்''

இப்படி இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் ஸ்ரீராமன் சொன்னார். (இ-எ)

ஜெய்ப்பூர் டெஸ்ட்

4 விக்கெட் இழப்புக்கு இந்தியா 228 ஓட்டங்கள்

ஜெய்ப்பூர், பெப். 22

ஜெய்ப்பூர் டெஸ்டின் முதல் நாள் ஆட்ட இறுதியில் இந்திய அணி 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 228 ஓட்டங்களை எடுத்தது

பாகிஸ்தானுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் நேற்று ஆரம்பமானது.

முதலில் இந்திய அணி துடுப்பெடுத்தாடத் தொடங்கியது

சுனில் கவாஸ்கர் முதலாவது பந்திலேயே ஆட்டமிழந்தார் மியன்டாட் பந்தைப் பிடிக்க இம்ரான் கான் விக்கெட்டைக் கைப்பற்றினார்.

ஸ்ரீகாந்த் 45 ஓட்டங்களுடனும் மொஹிந்தர் அமர்நாத் 49 ஓட்டங்களுடனும் வெஸ்கஸ்கார் 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

நேற்று ஆட்டமுடிவில் அசாருதீன் 72 ஓட்டங்களுடனும் ரவிசாஸ்திரி 22 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

போட்டியின் இரண்டாம் நாள் இன்று (ஞாயிறு).

நாளை திங்கட்கிழமை ஓய்வு நாள் (இ-எ)

நாகபூஷணி வாக்காளர்

மகா சபை கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 22

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த வாக்காளர் மகாசபைக் கூட்டம் இன்று ஞாயிறு காலை 9 மணிக்கு ஆலய கல்யாண மண்டபத்தில் நடைபெறும்.

கூட்டத்திற்கு அறங்காவலர் சபைத் தலைவர் திரு த. குலசேகரம் தலைமை வகிப்பார்.

மாலை 2 மணிக்கு அறங்காவலர் சபையின் இவ்வாண்டிற்கான உத்தியோகத்தர் தெரிவும், முதல் அறங்காவலர் சபைக் கூட்டமும் நடைபெறும். (இ-எ)

இறுதி மோதல் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம். பெப். 22

ஷப்ரூ யுனிக்கோ நிதி நிறுவனத்தின் அனுசரணையுடன் அரியாலை ஐக்கிய சமூகம் நடத்தும் ஏழு பேர் கொண்ட உதைபந்தாட்ட லீக் போட்டியின் இறுதி மோதல் தவிர்க்க முடியாத காரணங்களினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது

இன்று (ஞாயிறு) இந்த இறுதி மோதல் நடைபெறுவதாக இருந்தது. (இ-எ)

நாளைமுதல்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கப்படும்

யாழ் வின்சர் கலையரங்கில் நேற்று நடைபெற்ற அடகு வைத்தோர் சங்கக்கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதன்படி நாளை திங்கட்கிழமை முதல் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை யாழ் செயலகம் உட்பட அனைத்து அரச அலுவலகங்கள் முன்பாகவும் மறியல் போராட்டம் நடத்தப்படும்.

அடகுவைத்தோர் சங்கம் ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்துக்கு பதில் கிடைத்த போதிலும் அடகு நகைகள் திருப்பி ஒப்படைக்கப்படும் வரை மறியல் போராட்டம் கைவிடப்படமாட்டாது மேலும் விஸ்தரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

மறியல் போராட்

மக்களுக்காக கண்டி வீதி, பருத்தித்துறை வீதி, பலாலி வீதி, கே. கே எஸ் வீதி மானிப்பாய் வீதி. ஆகிய வீதிகளில் இலவச போக்குவரத்தும் நடத்தப்படும்.

கலந்து கொள்வோர் தங்கள் வீதிகளில் உள்ள முக்கிய சந்திகளில் காலை ஏழு மணிக்கு முன்னர் குழுமிநிற்குமாறு வேண்டப்படுகின்றனர்.

இப்போராட்டத்தை அடுத்து அரசிடம் இருந்தோ அல்லது மக்கள் வங்கி நிர்வாகத்திடம் இருந்தோ சாதகமான பதில் கிடைக்காத விடத்து மார்ச் 2 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் இலங்கை வங்கி. தேசிய சேமிப்பு வங்கி உட்பட சகல அரச நிர்வாகங்களுக்கு எதிராகவும் மறியல் போராட்டம் விஸ்தரிக்கப்படும் [illegible] தெரிவிக்கப்பட்டது

[illegible] கூட்டத்திற்கு ஏராளமானோர் சமூகம் தந்திருந்தனர்.

துவாரகை---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வரை 15 லட்சம் ரூபா செலவழிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது ஆழ்கடல் அகழ்வாராய்ச்சி வேலைகள் அடுத்தமாதம் 6 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளன.

10 நாட்கள் நீடிக்கும் இந்த ஆராய்ச்சியில் முதல் தடவையாக டெலிவிஷன் கமராக்களும் பயன்படுத்தப்பட உள்ளன

பிரபல 12 சுழியோடிகளில் 5 பேர் இந்த ஆராய்ச்சியில் ஈடுபடுவர்.

ஏற்கனவே நடந்த ஆராய்ச்சிகளில் துவாரகை காலத்து இறங்குதுறை கோட்டைச்சுவர்கள் முதலியன கண்டுபிடிக்கப்பட்டன. இவை துறைமுக நகரம் ஒன்று கடலினுள் மூழ்கியதைத் தெரிவிப்பதாக [illegible].

[illegible]த்துக்குப் போதிய நிதி உதவி அளிக்கப்பட்டால் கடலில் மூழ்கிய பூம்புகார் துறைமுகத்தைக் கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபடலாம்.

சைவசமய அறிவுப்போட்டி

வட்டுக்கோட்டை பெப் 22

சித்தன்கேணி கலைநகர் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினர் இன்று ஞாயிறு காலை வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் சைவசமய அறிவுப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளனர்

மன்றத்தலைவர் திரு கு. கோகுலதாசன் தலைமையில் நடைபெறும் இப்போட்டி மூன்றும் ஆண்டு முதல் பதினொராம் ஆண்டுவரையுள்ள மாணவர்களுக்கு இடையே ஆண்டு ரீதியாக நடத்தப்படவுள்ளது.

இதற்கான சகல நடவடிக்கைகளையும் மன்றப் பொதுச் செயலாளர் திரு.வி வள்ளிகாந்தன் மேற்கொண்டுள்ளார் (இ-161)

நெடுங்கேணி கிராமத்தில் தேடுதல்

வவுனியா, பெப். 21

நெடுங்கேணிக் கிராமத்தில் நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் நேற்று தீவிர தேடுதல் நடத்தினர்.

இத்தேடுதலின் போது சுமார் 50 இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பி. ரி ஐ செய்தி ஸ்தாபனம் அறிவித்தது (இ-எ)

யாழ்..

(1-ம்பக்கத் தொடர்ச்சி

விழக்கச் செய்தாம்.

இதேவரிசையில் ஏனைய கட்டடங்கள் தற்போதைய நிலையில் பெறுமதியானது என்று பார்க்க முடியாது மக்களின் பாதுகாப்புக்கருதி அவற்றையும் செயலிழக்கச் செய்யவேண்டியுள்ளது.

கட்டடங்கள் உடைக்கப்பட்டால், அல்லது உடைந்துபோனால் அவற்றை நாம் மீண்டும் ஒரு காலத்தில் கட்டிக்கொள்ளலாம். ஆனால் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது பிரதானம் -என்றார்.

(அ-10)

இரண்டுசிறுமி..

(1 ஆம்பக்க தொடர்ச்சி)

ஆகியோரே இறந்தவர்கள் ஆவர்.

வைபவம் ஒன்றுக்குச் சொல்லுவதற்காக உறவினர்வீட்டுக்குச் சென்று திரும்புகையில் வழியில் இருந்த குளத்தில் குளிக்க இறங்குகையில் நீரில் மூழ்கி இருவரும் இறந்தவர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-167)

அமிர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டனர். அவர்களுக்கும் எமக்கும் எந்தவித உறவுமில்லை. அவர்கள் தலைமறைவாகவே வாழ்கின்றனர் என்றார்

'' திரு. அமிர்தலிங்கம் யாழ்ப்பாணம் வர விரும்பினால்......? '' என்று செய்தியாளர் கேட்டபோது,

'' திரு. அமிர்தலிங்கம் யாழ் வருவது எமக்குப் பிரச்சினை அல்ல அது பற்றி நாம் கவலைப்படவுமில்லை'' என்று கிட்டு பதிலளித்தார்.

(அ-எ-10)

தீவுப் பகுதி ஆஸ்பத்திரிகளில்

மருந்து வகைகள் பழுதடையும் நிலையில்

யாழ்ப்பாணம், பெப். 22

குளிர்சாதனப் பெட்டிக்குள் வைக்கப்படும் உயர்ரக விலை மருந்து வகைகள் தீவுப்பகுதிகளில் உள்ள வைத்தியசாலைகளில் பழுதடையும் நிலையில் உள்ளன.

இந்த வைத்தியசாலைகளில் உள்ள குளிர்சாதனப் பெட்டிகள் கூடியளவு மண்ணெண்ணெயிலேயே இயங்கிவந்தன

குடாநாட்டுக்குள் அரசு விதித்துள்ள எரிபொருள் தடை காரணமாக தீவுப் பகுதியில் மண்ணெண்ணெய்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (இ-10)

முல்லைத்தீவில் அஞ்சலி

யாழ்ப்பாணம், பெப். 22

கைதடியில் நடைபெற்ற வெடி விபத்தில் மரணமடைந்த விடுதலைப் புலிப் போராளிகளுக்கு முல்லைத்தீவுப் பகுதி எங்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

(இ-107)

தமிழர்---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

நூற்றுக்கு நூறு தமிழ் பேசும் மக்களின் மாகாணமாக்கும் யோசனையே.

சிங்களப் பகுதிகளை கிழக்கு மாகாணத்தில் இருந்து பிரித்து எடுத்து வேறு மாகாணங்களுடன் சேர்க்கப் போகிறது இந்த அரசு.

இதனால் தமிழர், முஸ்லிம்களின் விகிதாசாரம் கிழக்கு மாகாணத்தில் அதிகரிக்கும். இது நாட்டின் நலனுக்கு ஆபத்தையே விளைவிக்கும்.

வடக்குடன் கிழக்கை ஸ்தாபன ரீதியாக இணைக்கும் திட்டத்தையும் ஜனாதிபதி தனது உரையில் தெரிவித்துள்ளார்.

இப்படி திரு. ஜயக்கொடி சொன்னார்.

(இ-எ)

வணிக மஞ்சரி வெளியீடு

யாழ்ப்பாணம் பெப். 22

வணிக அறிவியல் நிறுவனத்தினரின் வணிக மஞ்சரி சஞ்சிகை வெளியீடும் கருத்தரங்கும் இன்று ஞாயிறு காலை யாழ் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறும்.

திரு இ நி வரேந்திரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவிற்கு கலாநிதி வி. நித்தியானந்தன் முதன்மை விருந்தினராகவும், திரு. சி. சிவராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள்.

திரு வை. ச. செந்தில்நாதன் மங்களவிளக்கேற்றி ஆரம்பித்து வைக்க, திரு. ஆர். சுப்பிரமணியம் முதற்பிரதியைப் பெறுவார்.

(இ-5)

இந்திய நாடாளுமன்ற கூட்டத் தொடர்

புதுடில்லி, பெப். 22

இந்திய நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத் தொடர் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாக உள்ளது

ஜனாதிபதி ஷெயில்சிங் புதிய கூட்டத் தொடரை அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரை நிகழ்த்துவார்.

(இ-எ)

அறிவித்தல்

யாழ் நகரில் June 1 ஆம் திகதி முதல் சேவைசெய்து வந்த HOTEL GNANAMS-NEW MANAGEMENT ஸ்தாபனத்தார் தங்கள் சேவையை 15-2-87 அன்று முடித்துக்கொண்டு தங்கள் சேவையை R S. R. GREEN PEKING PALACE ல் தொடர்ந்து செய்வார்கள் என்பதை நண்பர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் அறியத்தருகிறோம்.

உங்களுக்கு. அறிமுகம்செய்த Sat, Sun. Beer Garden இல் Free Omelett உடன் தொடர்ந்தும் கிடைக்கும் என்பதை அறிதருகிறோம்.

இதற்கு வேறு கிளைகள் இல்லை.

R. S. R. Green Peking Palace,
69G, 4th Cross Street,
JAFFNA.

31ஆம் நாள் நினைவஞ்சலி

இராசதுரை - ஜெயச்சந்திரன்

அன்னையின் மடியில்:- 1. 11. 1961
மண்ணின் மடியில்:- 23. 1. 1987

திருமலை, செல்வநாயகபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட வீரவேங்கை ஜெயச்சந்திரன் (கப்டன் நேசன்) 23-1-87 ல் தாய்நாட்டின் மண்மீட்புக்காக மூதூரில் அகால மரணமானார். அன்னாரின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

துயரத்தால் வாடும்:
தாய், சகோதரர்கள்,
சகோதரிகள்.
மைத்துனர்கள், நண்பர்கள்.